## சேலம் தாரமங்கலம் ஊராட்சியில்

# ரூ.2.22 கோடி மதிப்பீட்டில் 48 வீடுகள்!

## அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார்!

சேலம், டிச. 18- நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் நேற்று முன்தினம் கே.என்.நேரு, சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், ஆரூர்பட்டி ஊராட்சியில் இன்று (16.12.2023) நடைபெற்றநிகழ்ச்சியில், வெள்ளக்கல்பட்டி நரிக்குறவர் குடியிருப்பில் ரூ.2.22 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள 48 வீடுகளைத் திறந்து வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் பேசியதாவது:-

முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியின்போது முதன்முதலாக தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அரசு சார்பில் வீடுகள் கட்டும் திட்டம் உருவாக்கப்பட்டது. பின்னர், ஒன்றிய அரசின் துணையோடு ஒவ்வொரு ஊராட்சியிலும் வீடுகள் கட்டித்தரப்பட்டது. இதனைத்தொடர்ந்து, மீண்டும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பதவியேற்ற பின்பு ஓடுகள் போட்டு கட்டப்பட்ட வீடுகளை ஒட்டு வீடுகளாக மாற்றித் தந்தார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடியின மக்கள் மட்டுமின்றி நரிக்குறவர் மக்களுக்கும் முக்கியத்துவம் அளித்து சிறப்புத் திட்டங்களை மேற்கொண்டு வருவதோடு, அவர்களது வீட்டிற்கு நேரடியாகச் சென்று உணவு அருந்தி பெருமை சேர்த்துக் கொடுத்தார்கள். மேலும், தற்போது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒட்டு வீடுகளில் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ளவும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். அதுமட்டுமல்லாமல், நரிக்குறவர் இனத்தை பழங்குடியினர் பட்டியலில் இணைத்து வேலை வாய்ப்புகளிலும் முன்னுரிமை அளிக்கப் பட்டுள்ளது.

மேலும், பள்ளிக்கூடம், நியாய விலைக் கடை, பாலமலையில் 17 கி.மீ நீளத்திற்கு புதிய தார்சாலை அமைக்கும் பணி போன்ற பல்வேறு திட்டங்கள் தங்களுக்காகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அந்தவகையில், இன்றையதினம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பில் சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், ஆரூர்பட்டி ஊராட்சியில் வெள்ளக்கல்பட்டி நரிக்குறவர் குடியிருப்பில் ரூ.2.22 கோடி மதிப்பீட்டில் 48 வீடுகள் புதியதாக கட்டப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டுவரப் பட்டுள்ளன.

மேலும், தங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் அரசால் மேற்கொள்ளப்படும். இதனை அனைவரும் நல்லமுறையில் பயன்படுத்திக் கொண்டு தங்கள் வாழ்வில் முன்னேற்றம் அடைய வேண்டும். இவ்வாறு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பேசினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ. கார்மேகம், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர்இரா. இராஜேந்திரன், மாநகராட்சி ஆணையாளர் சீ. பாலச்சந்தர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) மரு.அலர்மேல் மங்கை, முன்னாள் அமைச்சர்டி.எம்.செல்வகணபதி உட்பட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்



நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் நாமக்கல் கிழக்கு மாவட்ட அலுவலகமான கலைஞர் அறிவாலயம் இனமானப் பேராசிரியர் கூட்டரங்கில் நடைபெற்றது. நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், சட்டமன்ற உறுப்பினர்கள் நாமக்கல் பெ.ராமலிங்கம், சேந்தமங்கலம் பொன்னுசாமி, மாவட்ட அவைத் தலைவர் சி.மணிமாறன் மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# திண்டிவனத்தில் 1.63 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டப்பணி!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்!

திண்டிவனம், டிச. 18- விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் நகராட்சி 24 வது வார்டுபுதுச்சேரி சாலையில் உள்ள இருகாடு சுடுகாட்டில் புதிய அதி நவீன எரிவாயு தகன மேடை அமைத்து கொடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள்அரசுக்கு கோரிக்கை வைத்தனர்.

பொதுமக்களின் கோரிக்கையை ஏற்றுதிண்டிவனம் புதுச்சேரி சாலையில் உள்ள மயானத்தில் 1 கோடியே 63 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய அதிநவீன எரிவாயு தகனமேடை அமைப்பதற்கு விழா நடைபெற்றது.

திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு அதி நவீன எரிவாயு தகனமேடை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டி செய்து பணிகளை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட பொருளாளர் ரமணன்,நகர மன்ற உறுப்பினர்கள் ராம்குமார்,தீபா விக்னேஷ்வர் சிங், மாவட்ட சிறுபான்மை யினர் அணி அமைப்பாளர் அன்சாரி, சுற்றுச்சூழல் அமைப்பாளர் ராஜா, துணைச் செயலாளர் கௌதமன்,நகராட்சி பொறியாளர் பவுல் செல்வம்,முன்னாள் நகர துணை செயலாளர் அசோக்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# மன்னார்குடி நேசக்கரங்களின் "அட்சய வாசல்" திட்டம்!

## பொதுமக்கள் பெரும் வரவேற்பு!

திருவாரூர்,டிச. 18 - திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி நேசக்கரங்கள் அமைப்பின் மற்றுமொரு திட்ட மான"அட்சயவாசல்"அமைப்பை நகர்மன்ற தலைவர் மண்ணை த.சோழராஜன் திறந்துவைத்தார். இந்த திட்டம் தற்போது மக்களின் ஏகோபித்த பாராட்டை பெற்றுவருகிறது. ஏழை, எளிய, பாமர மக்களின் ஆடை கனவை நனவாக்கும் இந்த திட்டம் நேசக்கரங்கள் ஒருங்கிணைப்பாளர் கோபால கிருஷ்ணன் அவர்களால் நேரடி கண்காணிப்பில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சீரிய ஆட்சியின் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அவர்களின் சீரிய முயற்சிகளால் மன்னார்குடி பெரும் வளர்சியை அடைந்துவருகிறது.

மன்னர்குடி பகுதியின் பெருமை மிகு அடையாளங்களுள் ஒன்றாக இயங்கிவரும் "நேசக்கரங்கள்" எனும் சமூக அமைப்பு மக்களின் மனம் கவர்ந்த ஒன்றாக விளங்குவதோடு பல்வேறு நலத்திட்டங்களை எந்த பிரதிபலனையும் எதிர்பாராமல் செய்துவருகிறது. அரசு மருத்துவமனைக்கு வரும் ஏழை எளிய ஆதரவற்றவர்களுக்கு உதவிக்கரங்கள் நீட்டுவது, குடும்பத்தினரால் கைவிடப்பட்டவர்கள், மனநோயாளிகள் என மருத்துவ உதவிகள் தேவைப்படுவோருக்கு தேடிச்சென்று நேசக்கரங்கள் உதவி வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக கொரோனா காலத்தில் இறந்தவர்களை சொந்தங்களே கைவிட்டு இறுதிக்கடன் செய்ய தயங்கிய நிலையில் அவர்களின் உடலை நேசக்கரங்கள் அமைப்பினரே இறந்தவர்கள் எந்த மதமானாலும் அந்தந்த மத சடங்குகளின்படி அடக்கம் செய்தது மக்களிடையே பெரும் பாராட்டை பெற்றது. மேலும் மக்களின் பயன்பாட்டிற்கு என ஆம்புலன்ஸ் வசதியையும் "நேசக்கரங்கள்" செய்துள்ளது. இந்த சேவைகளுக்காக அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, நகர்மன்ற தலைவர் மன்னை த.சோழராஜன் ஆகியோரின் வாழ்த்துக்களோடு, திருவாரூர் மாவட்ட நிர்வாகம் நேசக்கரங்கள் அமைப்பை பாராட்டி கவுரவித்தது.

இப்படி பல்வேறு சமூக சேவைகளை செய்துவரும் நேசக்கரங்கள் அமைப்பினரால், ஏழை எளிய ஆதரவற்றவர்களின் ஆடை தேவைகளை பூர்த்தி செய்யும் விதமாக "அட்சய வாசல்" எனும் சீர்மிகு திட்டம் செயல்படுத்தப் பட்டுள்ளது. இந்த திட்டத்தின்படி பொதுமக்கள் தங்கள் பயன்படுத்திய நல்ல நிலையில் உள்ள ஆடைகளை நேசக்கரங்கள் அமைப்பு உருவாக்கியுள்ள "அட்சயவாசல்" அலுவலகத்தில் ஒப்படைத்தால், அந்த ஆடைகள் அந்தந்த அளவுகளின் அடிப்படையில் பிரித்து வைக்கப்படுகிறது.

அப்படி வைக்கப்பட்டிருக்கும் ஆடைகளை ஆடை தேவைப்படுவோர் அந்த அட்சய வாசல் அலுவலகத்திற்கு நேரடியாக வந்து இலவசமாக எடுத்து செல்ல அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது. அதற்காக நேசக்கரங்கள் அமைப்பின் மூலம் இரண்டு நபர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆடையை இலவசமாக கொடுப்போரும் , எடுத்து செல்வோரும் அங்குள்ள குறிப்பேட்டில் பதிவு செய்து கொள்ளலாம்.

இதுகுறித்து நேசக்கரங்கள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கோபால கிருஷ்ணன் கூறும்போது, "இயலாத நிலையில் மக்களின் ஆடை கனவுகளை பூர்த்தி செய்யும் ஒரு முயற்சியே இந்த "அட்சய வாசல் திட்டம்", இந்த திட்டம் தொடங்கிய நாள் முதல் பலர் பலனடைந்து வருவது மகிழ்ச்சியை தருகிறது. இந்த திட்டத்தினை செயல்படுத்த சமூக சிந்தனையுள்ள ஒரு திருநங்கையை இங்கே பணியமர்த்தியுள்ளோம், அவர் ஆடை கொடுக்க வருவோருக்கும், ஆடைகள் எடுக்க வருவோருக்கும் தேவையான உதவிகளை செய்துவருகிறார். தீபாவளி சமயத்தில் புத்தாடை எடுக்க இயலாதவர்கள் இந்த திட்டத்தில் பலனடைந்தது குறிப்பிடத்தக்கதாகும் . இந்த சேவைகளை எங்கள் நேசக்கரங்கள் அமைப்பினர் தொண்டுள்ளத்தோடு செய்துவருகினர். எங்கள் நேசக்கரங்கள் அமைப்புக்கு தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அவர்களும் ,நகர்மன்ற தலைவர் மன்னை த.சோழராஜன் அவர்களும் ஊக்கம் கொடுத்து வருவது எங்களுக்கு உற்சாகத்தை தருகிறது என்று குறிப்பட்டார்.

ஏழை எளிய ஆதரவற்ற மக்கள் தங்களின் ஆடைகளுக்காக யாரிடமும் கையேந்தாமல் உரிமையோடு அட்சயவாசல் அலுவலகம் வந்து தங்களுக்கு தேவையான ஆடைகளை உரிமையோடு எடுத்து செல்வதை பல்வேறு தரப்பினரும் பாராட்டிவருகின்றனர்.

